# ஒரு மதிப்பெண் வினாத்தேர்வு

## பத்தாம் வகுப்பு - கணிதம்

### பாடம் - 3 (தேர்வு -1)



தயாரிப்பு : ப. இளங்கோவன்
பட்டதாரி ஆசிரியர் , அரசு மேல்நிலைப் பள்ளி , கோலியனூர். விழுப்புரம் மாவட்டம்

1 ஒரு நேரிய பல்லுறுப்புக் கோவையின் வரைபடம் ஒரு

(1) நேர்கோடு (2) வட்டம் (3) பரவளையம் (4) அதிபரவளையம்

2 $x+y-3x=-6$, $-7y+7z=7$, $3z=9$ என்ற தொகுப்பின் தீர்வு

(1) $x=1, y=2, z=3$ (2) $x=-1, y=2, z=3$

(3) $x=-1, y=-2, z=3$ (4) $x=1, y=2, z=3$

3 $q^2x^2+p^2x+r^2=0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வர்க்கங்கள், $qx^2+px+r=0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் எனில், $q, p, r$ என்பன

(1) ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன

(2) ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் உள்ளன

(3) கூட்டுத் தொடர் வரிசை மற்றும் பெருக்குத் தொடர்வரிசை இரண்டிலும் உள்ளன.

(4) இதில் எதுவும் இல்லை.

4 $(2x-1)^2=9$ –யின் தீர்வு

(1) $-1$ (2) $2$ (3) $-1, 2$ (4) இதில் எதுவும் இல்லை

5 $\frac{x}{x^2-25}-\frac{8}{x^2+6x+5}$ –யின் சுருங்கிய வடிவம்

(1) $\frac{x^2-7x+40}{(x-5)(x+5)}$ (2) $\frac{x^2+7x+40}{(x-5)(x+5)(x+1)}$

(3) $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$ (4) $\frac{x^2+10}{(x^2-25)(x+1)}$

6 $x^2+4x+4$ என்ற இருபடி பல்லுறுப்புக் கோவை $X$ அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

(1) 0 (2) 1 (3) 0 அல்லது 1 (4) 2

7 $x^4+64$ முழு வர்க்கமாக மாற்ற அதனுடன் பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும்?

(1) $4x^2$ (2) $16x^2$ (3) $8x^2$ (4) $-8x^2$

8 $x^2-2x-24$ மற்றும் $x^2-kx-6$ –யின் மீ.பொ.வ. $(x-6)$ எனில், $k$ –யின் மதிப்பு

(1) 3 (2) 5 (3) 6 (4) 8

9 $\frac{3y-3}{y}\div\frac{7y-7}{3y^2}$ என்பது

(1) $\frac{9y}{7}$ (2) $\frac{9y^3}{(21y-21)}$ (3) $\frac{21y^2-42y+21}{3y^3}$ (4) $\frac{7(y^2-2y+1)}{y^2}$

10 மூன்று மாறிகளில் அமைத்த மூன்று நேரியல் சமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுகள் இல்லையெனில், அத்தொகுப்பில் உள்ள தளங்கள்

(1) ஒரே ஒரு புள்ளியில் வெட்டுகின்றன (2) ஒரே ஒரு கோட்டில் வெட்டுகின்றன

(3) ஒன்றின் மீது ஒன்று பொருந்தும் (4) ஒன்றையொன்று வெட்டாது

LIVEWORKSHEETS